# SIVAGANGAI DIOCESE
## News Letter

**January 2026**






பெண்களின் மாண்பும் பங்களிப்பும்

## BISHOP'S ENGAGEMENTS FOR JANUARY - 2026

| DATE | TIME | APPOINTMENT | PLACE |
|---|---|---|---|
| 1 | | New Year Day | Bishop's House |
| 2 | | First Friday Mass | Idaikattur |
| 5 | | Recollection - Personal | Anjukottai |
| 7-8 | | Clergy Reunion | VPC |
| 10 | | Requiem Mass | Gnanaolivupuram |
| 11 | M | தமிழர் பொங்கல் | கீழடி |
| | E | Silver Jubilee Mass | K.M. Kottai |
| 12 | | Study Day | Bishop's House |
| 13 | | Silver Jubilee - St. Mary's Hr. Sec. School | Parthibanur |
| 16 | | Youth Pongal | VPC |
| 17 | | Blessing of the Dispensary, Saveriyarpattanam | R.S. Mangalam |
| 18 | | ஆன்மீக மாநாடு - வேலூர் மறைமாவட்டம் | வேலூர் |
| 19 | | Study Day | Bishop's House |
| 21-22 | | TNBC / TNLBC Meeting | Chennai |
| 24 | | Catholic Association Meeting | VPC |
| 25 | | Feast Mass, Holy Ghost Church | Bangalore |
| 26 | | Study Day | Bishop's House |
| 27 | | Consult Meeting | Bishop's House |
| 30 | | Marriage Mass | Sekkalai |
| 31 | | Feast Mass | Kalaiyarkoil |




✝
நான் பசியாய் இருந்தேன். நீங்கள் உணவு கொடுத்தீர்கள். (மத் 25:35)

**ஆனந்தா**
**நண்பகல் உணவுத்திட்டம்**
சிவகங்கை மறைமாவட்டம்



**நீங்களும் எம் கனவுத் திட்டத்தில் பங்கேற்கலாமே!**



பகிர்வோம்
பசிபோக்குவோம்

ஆனந்தா மதிய உணவுத் திட்ட வங்கிக் கணக்கு விபரம்

A/C No. : 50 10 07 66 93 74 62
A/C Name : ANANDA LUNCH SCHEME
IFSC Code : HDFC0008214
Branch : SIVAGANGAI
Bank : HDFC

## Bishop Speaks...



Dear Reverend Fathers, Brothers and Sisters,

Greetings of joy, wellness, and God's abundant peace!

As we step into the New Year 2026, I extend to each one of you my prayerful greetings and best wishes. May this New Year unfold as a year of grace, renewal, and deeper fidelity to our call. I wish to begin with a promising word of God: "See, I am doing something new! Now it springs forth, do you not perceive it?"*(Is 43:19).* This assurance from the Lord sets the tone for the New Year. God is always at work, creating, renewing, and leading us forward. Yet the key question remains: *Do we perceive it?* Newness is not merely about the passage of time or a change of calendar. True newness is born of change, inner change, a transformation of heart and perspective.

**Newness?**

Newness does not happen automatically. It emerges only where there is openness to change. We often speak about renewal in the Church, in the diocese, in institutions, in systems, and in people around us. Very frequently, our conversations are marked more by complaints and criticism than by conversion. Complaining, in many ways, is nothing but a silent demand that *others should change*, while we remain the same. We easily find fault with others and criticize systems, structures, or persons. But often, what irritates us most in others is something unresolved within ourselves.

There is a profound wisdom in the saying: *"We do not see things as they are; we see them as we are."* The unwanted qualities deeply rooted in us are the very ones we detect most quickly in others. Likewise, when we possess good qualities, we are able to recognize and appreciate them in others. In this sense, the other person becomes a mirror in which we see ourselves, our strengths as well as our weaknesses. Jesus Himself reminds us: "Why do you see the speck in your neighbour's eye, but do not notice the log in your own eye?" *(Mt 7:3).* Fault-finding, therefore, is often not about the other person; it is about our own unfinished inner work.



**A Trajectory Towards Newness**

The Gospel invites us to reverse the usual direction of judgment. True Christian wisdom teaches us to see the best in others, to acknowledge the worst in ourselves - not the other way around. Saint Paul exhorts us: "Do not be conformed to this world, but be transformed by the renewal of your mind." *(Rom 12:2)*

Transformation begins in the mind and heart. When we change our way of seeing, our way of relating also changes. Where there is humility, there is growth; where there is self-awareness, there is freedom. A wise saying reminds us: *"The one who conquers others is strong; the one who conquers himself is mighty." (Lao Tzu)*

The New Year offers us a grace-filled opportunity to pause, introspect, and set tone for new paths ahead. It is an invitation not merely to make resolutions, but to embrace conversion - daily, concrete, and sincere. The Psalmist prays, "Create in me a clean heart, O God, and renew a right spirit within me." *(Ps 51:10)*

This is the prayer of every priest and religious who desires true newness. When our hearts are renewed, our ministries become life-giving; when our vision is purified, our communities experience hope. As we begin this New Year, may we allow God to do something new within us, so that through us, He may renew the lives of those entrusted to our care.

**The Year of Women: A Call to Recognition and Empowerment**

The Tamil Nadu Bishops' Council has proposed 2026 as the "Year of Women." This is not merely a symbolic observance, but a prophetic invitation to the Church in Tamil Nadu to acknowledge, affirm, and strengthen the indispensable role of women in the life and mission of the Church and society. Women have always been at the heart of God's saving planfrom Mary, the Mother of the Redeemer, to the women disciples who stood at the foot of the Cross and became the first witnesses of the Resurrection. As Saint John Paul II reminded us: "The Church gives thanks for each and every woman… for the genius of women in every aspect of the life of society." (*Mulieris Dignitatem*, 31)

**Diocesan Pastoral Plan**

Keeping this vision in mind, the Diocesan Pastoral Council held an Orientation and Planning Session on 08th November 2025 at the Vianney Pastoral Centre, Sivagangai. After prayerful deliberations and consultations, the Council proposed concrete pastoral and social initiatives to be implemented during this Year of Women, with the aim of ensuring meaningful participation, leadership, and empowerment of women in our Diocese. I wish to share these important decisions with you and seek your wholehearted cooperation in their implementation.

**1. Mandatory Formation of Parish Pastoral Councils with Women's Representation**

The first and foundational decision concerns the Parish Pastoral Council. The Code of Canon Law clearly states: "If the diocesan Bishop judges it opportune, a pastoral council is to be established in each parish." *(Can 536 §1).* In the light of this provision and in keeping with our diocesan pastoral vision, it is now mandatory that every parish in the Diocese constitute a Parish Pastoral Council before Easter 2026. As per our diocesan policy, women shall have 50% representation in every Parish Pastoral Council. This is not merely numerical inclusion but a recognition of women as equal partners in discernment, planning, and decision-making in parish life.

**Parish Finance Committee with Equal Women's Representation**

Simultaneously, every parish must constitute a Parish Finance Committee, as required by Canon Law: "In each parish there is to be a finance council… which assists the parish priest in the administration of the goods of the parish." *(Can 537).* Here too, women must have the same 50% representation, in accordance with diocesan norms. Transparency, accountability, and shared responsibility are strengthened when women are actively involved in financial administration.

**2. Vicariate-Level Women's Empowerment Certificate Programme**

The second proposal is the introduction of a Vicariate-Level Women's Leadership Certificate Programme.



Five women will be chosen from each parish

The programme will run for six months,

conducted one day each month,

and will focus on leadership, faith formation, social awareness, legal literacy, communication skills, and pastoral engagement.

At the successful completion of the programme, certificates will be awarded to all participants who have regularly attended. This initiative aims to form women who are confident, informed, and capable of contributing effectively to both Church and society.

**3. Gender Sensitization and Empowerment Programmes in Educational Institutions**

The third proposal focuses on our educational apostolate. During the Year of Women, gender sensitization and empowerment programmes will be organized in our secondary schools and colleges. These programmes will help young people to grow in mutual respect and dignity, to understand gender justice from a Gospel perspective, and promote healthy, life-giving relationships.

**A Call to Shared Responsibility**

Dear Fathers, Brothers and Sisters these initiatives are not optional activities but pastoral priorities for the Year of Women in our Diocese. Their success depends on your leadership, openness, and commitment at the parish, vicariate, and institutional levels. Pope Francis reminds us: "The presence of women in the Church must go beyond mere functionality; it must be a real and effective presence." May the Year 2026 truly become a year in which women are seen, heard, formed, and empowered, and through them, our diocesan Church becomes more participatory, credible, and faithful to the Gospel!

Invoking the intercession of Mary, Woman of Faith and Courage, I entrust this Year of Women and all its initiatives to God's grace.

**With prayerful good wishes**
**for a grace-filled New Year 2026.**

+ **Lourdu Anandam**
Bishop of Sivagangai.

யூபிலி ஆண்டில்

மேதகு **ஆயர்** அவர்களின்

## திருவருகைக் கால அருள்பணிச் சுற்றுமடல் - 2025

இயேசுவில் என் அன்பிற்கினிய சகோதரிகளே, சகோதரர்களே,

இயேசு கிறிஸ்துவின் இனிய பெயரால் உங்கள் அனைவரையும் அன்போடு வாழ்த்துகிறேன்!

**“அகமகிழுங்கள், ஆண்டவர் அண்மையில் உள்ளார்”.**

திருவருகைக் காலத்தின் மூன்றாம் ஞாயிறு மகிழ்ச்சியின் ஞாயிறு என்று அழைக்கப்படுகிறது. “அவர்கள் முகம் என்றுமுள மகிழ்ச்சியால் மலர்ந்திருக்கும்; அவர்கள் மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைவார்கள்; துன்பமும் துயரமும் பறந்தோடும்” (எசா 35:10) என்ற எசாயா இறைவாக்கு இயேசுவின் மனுவுரு எடுத்தலால் நிறைவுறுகிறது என்ற மகிழ்வைக் கொண்டாட திருஅவை அழைப்பு விடுக்கும் ஞாயிறு ஆகும். நோபல் பரிசு பெற்ற வங்கக் கவிஞர் இரவீந்தரநாத் தாகூர் எழுதிய கீதாஞ்சலி என்ற நூலில் இடம் பெற்றுள்ள ஒரு சிறுகதை.

நாட்டின் அரசர் தங்கத்தேரில் நகர்வலம் வருகிறார். ஒரு யாசகன் (பிச்சைக்காரர்) அரசர் வருவதைக் கேள்விப்பட்டு ஆவலோடு காத்திருக்கிறார். அரசரின் தேர் யாசகனின் அருகில் நிறுத்தப்படுகிறது. தனக்கு அரசர் ஒரு பெரிய பரிசு தரப்போகிறார் என்று ஆவலோடு அரசரைப் பார்க்கிறார். அரசர் தனது கையை யாசகனை நோக்கி நீட்டி “நீ எனக்கு என்ன தருவாய்?” என்று கேட்டார். இந்தக் கேள்வியை சற்றும் எதிர்பார்க்காத யாசகன் தயங்கித் தயங்கி தனது சிறிய கைப்பையிலிருந்து ஒரு கோதுமை மணியை எடுத்து அரசரிடம் கொடுத்தார். அரசரின் தேர் அந்த இடத்தைவிட்டு நகர்ந்தது. யாசகன் ஏமாற்றத்தோடு நடக்க ஆரம்பித்தார். வெகு தொலைவு நடந்தபின் சோர்வோடு ஒரு மரத்தடியில்



அமர்ந்தார். பொழுது சாய்ந்தது. அப்போது அவரது கைப்பையைத் துலவினார். அவருக்குப் பெரிய ஆச்சரியம், அவரது கைப் பையில் ஒரே ஒரு தங்கக் கோதுமை மணி மின்னிக் கொண்டிருந்தது. அப்போது தனக்குள் “நான் எல்லாவற்றையும் கொடுத்து, கைப்பையை வெறுமையாக்கிருக்கலாம்” என்று ஆதங்கத்தோடு எண்ணினார்.

### மனுவுரு - வெறுமையான கடவுள்?

இயேசு பிறந்த இரவில் ஆண்டவருடைய தூதர் “இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்” என்று இடையர்களுக்கு அறிவிக்கிறார் (லூக் 2:10-11). பெரும் மகிழ்ச்சிக்குக் காரணம் இயேசுவின் பிறப்பு. மனுவுருவாதல் கடவுளின் மாபெரும் கொடை; கடவுள் தன் மகனை முழுமையாக மனுக்குலத்திற்குத் தாரை வார்த்துத் தருகிறார். “தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்” ( யோவா 3:16 ). ஆனால் அன்பு கூர்ந்து மனுவுரு எடுக்க கடவுள் “தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்” ( பிலி 2:7 ). மேலும் “அவர் செல்வராயிருக்கும் உங்களுக்காக (நமக்காக) ஏழையானார். அவருடைய ஏழ்மையினால் நீங்கள் (நாம்) செல்வராகுமாறு இவ்வாறு செய்தார்” (2 கொரி 8:9) என்று பவுல் அடியார் கூறுகிறார். இவ்வாறு எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்ட கடவுள் தன்னையே முழுமையாய் கொடுக்கிறார். கொடுப்பதற்காக கடவுள் தன்னையே வெறுமையாக்குகிறார். எனவே வெறுமையாக்கிக் கொடுக்கும்போது மகிழ்ச்சி பிறக்கிறது. இவ்வாறு நாம் அனைவரும் மகிழ்ச்சியின் காரணிகளாக வாழ யூபிலி ஆண்டின் திருவருகைக் காலம் நம்மை சிறப்பாய் அழைக்கிறது. அப்படியெனில் நாம் மகிழ்ச்சியின் காரணிகளாக எப்படி மாறுவது?

### 1. களஞ்சியங்களை வெறுமையாக்கல்

அறிவற்ற செல்வன் உவமையில் செல்வன் அதிகமான விளைச்சல் கிடைத்த போது களஞ்சியங்களை இடித்து இன்னும் பெரிதாகக் கட்டி தான் மட்டும் மகிழ்ச்சியில் திளைக்க எண்ணினான்.

ஆனால் கடவுள் அவனை அறிவிலியே என்று அழைத்து அவன் உழைப்பின் பயனை அவன் அனுபவிக்கலியலாத நிலைக்குத் தள்ளி அந்த இரவே அவனுடைய உயிர் அவனைவிட்டு பிரியச் செய்கிறார் (லூக் 12:16-20). கடவுள் ஒருவருக்கு வழங்கும் ஆசிரை எல்லோருக்கும் பகிர்ந்தளிக்கும் போது அவர் கடவுள் முன் செல்வராகிறார். தான் பெற்றுக் கொண்ட செல்வம், அறிவு, திறமை, நேரம், நற்பண்புகள், சமூக மதிப்பு, உறவுச் செழுமை, மன நிறைவு, உடல் உள்ள ஆற்றல் ஆகியவற்றைப் பிறரின் வாழ்விற்காக வழங்கும்போது நமது களஞ்சியம் உலகப் பார்வையில் வெறுமையாகலாம். ஆனால் நமது மகிழ்ச்சிக் களஞ்சியம் நிரம்பி வழியும் என்பதை ஆழமாக உணர வேண்டும். இதையே திருத்தந்தை பிரான்சிஸ் "வறியவர்களுக்கும், தேவையிலுள்ளவர்களுக்கும் நம்மிடம் உள்ள வளங்களைப் பகிரும்போது அது நிலைவாழ்விற்கான முதலீடாகிறது" என்றார். திருத்தந்தை பதினான்காம் லியோ "நான் உன்னை அன்பு செய்கிறேன்" (Dilexi te) என்ற தனது முதல் திருத்தூது ஊக்க உரையில் இதைத் தெளிவாக "நமது நம்பிக்கையையும் ஏழைகளின்மேல் உள்ள கரிசனையையும் பிரிக்க முடியாது" என்றும் "தேவையில் உள்ளோருடன் நமக்குள்ளதைப் பகிர்தல் ஒரு விருப்பத் தேர்வல்ல, மாறாக நற்செய்தியை வாழ்வாக்கும் இன்றியமையாத நெறிமுறையாகும்" என்றும் கூறுகிறார்.

எனவே நம்மை வெறுமையாக்கும் பகிர்வின் வழியாக எளியோரும், தேவையிலுள்ளோரும் கடவுளின் அன்பையும், பராமரிப்பையும் அனுபவிக்க உதவுவோம். கடவுள் நம்மை ஆசிர்வதிக்கும் அளவிற்கு தேவையில் உள்ளவர்களோடு பகிர்வோம். குறிப்பாக கிறிஸ்து பிறப்பின் நினைவைக் கொண்டாடும் இந்நாட்களில் நமது கொண்டாட்டச் செலவீனங்களில் ஒரு பகுதி ஏழைகளுக்கு உரியது என்ற தீர்மானத்தோடு செயல்படுவோம்.

### 2. தீய இதயத்தை வெறுமையாக்கல்

மனித இதயம்தான் மனிதரின் சிந்தனை, விருப்பங்கள் மற்றும் முடிவுகளின் மையம். கடவுள் மனிதனை அன்பு செய்யவே படைத்தார்; ஆனால் பாவம் உள்ளே நுழைந்து இதயத்தைச் சீரழித்து கடவுளின அருள் உள்நுழைவதைத் தடுத்து விடுகிறது. "மனித இதயத்திலிருந்து பரத்தமை, வஞ்சகம், காமவெறி, பொறாமை, பழிப்புரை, செருக்கு, மதிகேடு ஆகியவற்றைச் செய்யத் தூண்டும் தீய எண்ணங்கள் வெளிவருகின்றன" (மாற் 7:21-22) என்கிறார் ஆண்டவர் இயேசு. நமது இதயம் தீமைகள், பாவங்களின் ஆதிக்கத்திற்கு உட்படும்போது 'இம்மானுவேலாகிய' கடவுள் நம்மில் குடியிருக்கவியலாது. கசப்புணர்வு நிறைந்த இதயம் அமைதியைப் பெற்றுக் கொள்ள முடியாது; ஆணவத்தால் நிரம்பிய இதயத்தில் தாழ்ச்சிக்கு இடமில்லை; வெறும்புணர்வால் நிறைந்த இதயத்தில் அன்பிற்கு இடமில்லை. தீமைகள் இதயத்தை ஆக்கிரமித்தால் விண்ணகப் பண்புகளுக்கு இடமில்லை. வாக்கு மனுவுருவான இயேசுவுக்கு விடுதியில் இடமில்லை (லூக் 2:7) என்று அறிந்துள்ள நமக்கு இம்மானுவேலராகிய இயேசுவுக்கு நம் இதயத்தில் இடமில்லாமல் வாழ்கிறோம் என்பதை எப்போது உணர்வது? திருமுழுக்கு யோவான் "ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள்; அவருக்காக பாதையைச் செம்மையாக்குங்கள்" (லூக் 3:4) என்று ஆண்டவரின் வழியை ஆயத்தப்படுத்தி பாலைவனத்தில் முழங்கினார். தீமைகள், பாவங்கள் என்ற தடைகளை நீக்காமல் ஆண்டவருக்காக வழியை ஆயத்தப்படுத்த இயலாது. தாழ்ச்சியால் (யாக் 4:6), ஒப்புரவு அருள் அடையாளத்தால் (1 யோவா 1:9), மன்னிப்பால் (லூக் 6:37), தூய்மையால் (மத் 5:8), போதுமென்ற மனநிலையால் (மத் 6:24), மேலான நேர்மறையான எண்ணங்களால் (கொலோ 3:2), நற்செயல் புரியும் மனநிலையால் (எபே 2:10), நமது இதயத்தை நிரப்புவோம். "நிறைவானது வரும்போது அறைகுறையானது ஒழிந்துபோம் (1கொரி 13:10), தாவீது அரசரோடு சேர்ந்து "தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்" (திபா 51:10) என்று செபிப்போம். அப்போது 'மாரனாதா' (ஆண்டவரே வாரும்!) என்ற நமது விருப்பம் நிறைவேறி அவரின் அருள் நலமும் பேரன்பும் நம்மையும், நமது குடும்பங்களையும் இப்பொழுதும் எப்பொழுதும் புடை சூழ்ந்து வரும்.

உங்கள் அனைவருக்கும் இறையாசீர்!

+ மேதகு ஆயர் லூர்து ஆனந்தம்
சிவகங்கை மறைமாவட்டம்

## Tamil Nadu Bishops' Council (TNBC)
## Tamil Nadu Latin Bishops' Council (TNLBC)

TNLBC Secretariat | 22/45, Santhome High Road | Chennai - 600 004 | Tamil Nadu | India
T : 044-24611949 | M : 82203 91649 | E : tnbctnlbc@gmail.com | Web : www. tnbctnlbc.in

சென்னை, 26 டிசம்பர் 2025

### தமிழக ஆயர் பேரவையின் வன்மையான கண்டன அறிக்கை

பன்முகத் தன்மையின் அடித்தளத்தில் கட்டப்பட்ட ஒரு வலுவான சமூகம் இந்திய சமூகமாகும். பல்வேறு சமயத்தவர் இந்த மண்ணில் சகோதர சகோதரிகளாக வாழ்ந்து வருவது இந்திய சமூகத்தின் தனிப்பட்ட சிறப்பாகும். ஆனால் அண்மைக் காலங்களில் கிறிஸ்தவர்கள் உட்பட பல சிறுபான்மை சமூகங்கள் மீது நடைபெறும் தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள், பொய் வழக்குகள் போன்றவை நாட்டின் ஜனநாயக அடித்தளத்தைப் பற்றிய ஆழ்ந்த கேள்விகளை எழுப்புகின்றன. குறிப்பாக கிறிஸ்து பிறப்புக் காலத்தையொட்டியும் கிறிஸ்து பிறப்புப் பெருவிழா அன்றும் நம் நாட்டில் வட மாநிலங்களில் கிறிஸ்துமஸ் விழாக்களின் போதும் வழிபாட்டின் போதும் அமைதியான முறையில் வழிபட்ட மக்களைத் தாக்கிய நிகழ்வுகள் பேரதிர்ச்சியைத் தருகின்றன. இச்செயல்களை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். இந்திய அரசமைப்பு சட்டம் குடிமக்கள் அனைவருக்கும் சமயச் சுதந்திரம், சமத்துவம் மற்றும் சம மரியாதையை உறுதி செய்கிறது. ஆயினும் பல்வேறு வடிவங்களில் கிறிஸ்தவர்கள் மீதான தாக்குதல்கள் இன்றளவும் தொடர்கின்றன. குறிப்பாக தேவாலங்களையும் ஜெப மண்டபங்களையும் சேதப்படுத்துதல், கிறிஸ்தவ வழிபாடுகளில் இடையூறுகளிலும் வன்முறையிலும் ஈடுபடுதல், அருள்பணியாளர்கள், துறவியர் சமயப் பணியாளர்கள் மீது உடல் மற்றும் மன தாக்குதல்கள், மதமாற்றம் என்ற பெயரில் பொய் வழக்குகள், காவல்துறை தொல்லைகள், கிறிஸ்தவ சமூக சேவை நிறுவனங்களின் மீது சந்தேகப் பார்வை, நிர்வாக ரீதியாக அழுத்தங்கள் கொடுத்தல் என்பவை போன்றவை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

இப்படிப்பட்ட நிகழ்வுகள் பெரும்பாலும் ஊடகங்களில் முழுமையாக வெளிச்சம் பெறாமல் போகின்றன. ஆனால் சிறுபான்மையினரின் வாழ்க்கையில் அவை ஆழ்ந்த காயங்களை ஏற்படுத்துவதை நாம் காண முடியும். இந்தத் தாக்குதல்களுக்குப் பின்னணியாக தீவிர மதவாத அரசியல், மதமாற்றம் குறித்த தவறான பிரச்சாரம், மதமாற்ற எதிர்ப்புச் சட்டங்களைத் தவறாகப் பயன்படுத்துதல், சமூக ஊடகங்களில் பொய் தகவல்கள் மற்றும் வெறுப்பு பேச்சுகள் பரப்புவது போன்றவை உள்ளன.

கிறிஸ்தவர்கள் மீது நடைபெறும் தாக்குதல்கள் அந்தச் சமூகத்தை மட்டும் பாதிப்பதில்லை. மாறாக அவை இந்தியச் சமூகத்தின் ஒற்றுமை, மக்களாட்சி என்னும் பண்புகளைப் பாதிக்கின்றன. குறிப்பாக இத்தகைய தொடர்தாக்குதல்கள், சிறுபான்மை சமூகங்களில் பயத்தையும் பாதுகாப்பற்ற உணர்வையும், சட்டத்தின் ஆட்சியிலான நம்பிக்கை குறைதல், மதங்களுக்கு இடையேயான உறவுகளில் விரிசல் போன்றவற்றிற்கும் காரணியாகிறது. இத்தகைய சவால்களுக்கு நடுவில் கிறிஸ்தவ சமூகம் பெரும்பாலும் அமைதியான, அரசமைப்புச் சட்டப் பாதையிலான பதில்களையே வழங்கி வருகிறது. சட்ட ரீதியான போராட்டங்களை முன்னெடுப்பதும், சமயங்களுக்கிடையேயான உரையாடல்களை முன்னெடுப்பதும், சமூக சேவையை மேலும் தீவிரப்படுத்துவதுமே இதன் பதிலாக அமைவது கிறிஸ்தவத்தின் மாண்பை சுட்டிக்காட்டுகிறது.

எனவே இந்தியாவில் கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல அனைத்துச் சிறுபான்மை சமூகங்களும் பாதுகாப்புடன் வாழ்வதற்காக, ஆளும் அரசுகள் அரசமைப்புச் சட்டத்தை உறுதியாக காக்க வேண்டும். காவல்துறையும் நிர்வாகமும் பாகுபாடு இன்றி செயல்பட வேண்டும். ஊடகங்கள் பொறுப்புடன் உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும். குடிமக்கள் வெறுப்பை அல்ல மனித நேயத்தையே தேர்ந்தெடுக்க வேண்டும். அப்போதுதான் எல்லாரும் சமத்துவத்தோடும் சுதந்திரத்தோடும் சகோதரத்துவம் வாழுகிற ஒரு நாடாக இந்தியா திகழும். ஏனென்றால் மத சுதந்திரம் ஒரு சமூகத்தின் உரிமை மட்டும் அல்ல. அது இந்திய ஜனநாயகத்தின் உயிர் நாடி. எனவே, அமைதி, நீதி, பிறர் மீதான மரியாதை ஆகிய மதிப்பீடுகளே இத்தகைய சவால்களுக்கு நிலையான பதிலாக இருக்க முடியும். இந்திய நாட்டின் சகோதர சமயங்களை சார்ந்த குடிமக்களுக்குத் தமிழக ஆயர் பேரவை அன்போடு கேட்டுக் கொள்வதெல்லாம், வன்முறையைத் தவிர்த்து, வெறுப்பு அரசியலை நீக்கி, இந்த மண்ணில் அமைதியோடும் ஒற்றுமையோடும் வாழ உறுதி ஏற்போம் என்பதே.

+ George Antonysamy

+ ஜார்ஜ் அந்தோணிசாமி
சென்னை மயிலை உயர்மறைமாவட்ட பேராயர்
தமிழக ஆயர் பேரவைத் தலைவர்

TAMILNADU BISHOP'S COUNCIL * President * CHENNAI - 600004

PRESIDENT
Most Rev. Dr. George Antonysamy
Archbishop of Madras - Mylapore
Archbishop's House, No. 41,
Santhome High Road, Chennai - 600 004.
Tel : 044 2461102, 24640833
Email : abpmmsec@gmail.com

VICE PRESIDENT
Most Rev. Dr. Lawrence Pius
Bishop of Dharmapuri
Bishops' House, Post Box 32,
Gundalapatty Medu, Dharmapuri - 636701.
Tel : 04342- 2288409
Email : dharmapuridiocese@gmail.com

SECRETARY
Most Rev. Dr. Nazarene Soosai
Bishop of Kottar
Bishops' House, P.B. No. 17, Negercoil
Kanyakumar Dt. - 629001.
Tel : 04652-278343, 279152
Email : kottardiocese@yahoo.co.in

TREASURER
Most Rev. Dr. S. Antony samy
Archbishop of Madurai,
Archbishop's House,
K. Pudur, Madurai – 625 007.
Tel. No: 0452 – 2566198
Email : abssecretarymdu@gmail.com



## DILEXI TE - "I Have Loved You"
## Summary of Pope Leo XIV's Apostolic Exhortation

On 4 October 2025, the Memorial of Saint Francis of Assisi, Pope Leo XIV promulgated his first Apostolic Exhortation, *Dilexi te* ("I Have Loved You"). Addressed to the entire People of God, the document places Christ's love for the poor at the very heart of Christian faith and ecclesial mission. Rooted in Sacred Scripture and the living Tradition of the Church, the exhortation calls for a renewed conversion of hearts, pastoral practices, and social structures.

### Christ's Love: The Source of Christian Life (§§ 1-5)

The Holy Father opens *Dilexi te* by affirming that Christian life begins with the encounter with Jesus Christ who loves first (§1-2). This love is personal, faithful, and concrete, reaching its fullest expression in Christ's closeness to the poor and suffering (§3-4). Pope Leo XIV emphasizes that love is not an abstract idea but the foundation and criterion of authentic discipleship (§5).

### The Poor: A Privileged Place of Encounter with Christ (§§ 6-18)

Drawing from the Gospel, the Pope recalls that Jesus consistently drew near to the poor, the sick, and those excluded from society (§6-9). Referring to Matthew 25, he reiterates that Christ identifies himself with "the least of these" (§10-11). Love for the poor, therefore, is not optional but an essential requirement of fidelity to the Gospel (§12).

The exhortation stresses that the poor are not merely recipients of charity; they are bearers of dignity and living witnesses who evangelize the Church (§13-15). Their presence calls the Church to humility, conversion, and renewed trust in God (§16-18).

### Scripture and Tradition: An Inseparable Bond (§§ 19-35)

Pope Leo XIV situates the Church's concern for the poor within the continuous witness of Scripture and Tradition (§19). From the prophets of Israel who defended the oppressed (§20-22) to Christ who embraced poverty for humanity's sake (§23), God's love consistently manifests itself in justice and mercy.

Citing the Fathers of the Church and the social teaching of the Magisterium, the Pope underlines the principle of the universal destination of goods (§24-30). He warns that worship divorced from concern for the poor risks becoming empty (§31-33), affirming that love of God is inseparable from love of neighbour (§34-35).

**Contemporary Forms of Poverty (§§ 36-52)**

The exhortation offers a discerning analysis of modern forms of poverty, which extend beyond material deprivation (§36). Pope Leo XIV highlights social exclusion, loneliness, lack of education, forced migration, unemployment, and violations of human dignity (§37-41). He describes growing global inequalities as a serious moral challenge (§42-44).

The Pope cautions against indifference and attitudes that normalize injustice (§45-47), calling instead for compassion, responsibility, and active solidarity (§48-50). The Church, he insists, must never become accustomed to suffering (§51-52).

**Conversion and Structural Transformation (§§ 53-75)**

A central call of *Dilexi te* is to personal and structural conversion (§53). While acts of charity remain indispensable, the Pope stresses that unjust social and economic structures must also be addressed (§54-56). Christian love must shape public life and inspire efforts toward justice and peace (§57-60).

The Holy Father invites all members of the Church bishops, priests, religious, and laityto examine their lifestyles and pastoral priorities (§61-64). A comfortable or self-referential Christianity, he warns, contradicts the Gospel (§65-67). The Church's credibility depends on her closeness to the poor (§71-75).

**Witnesses of Love and Hope (§§ 76-95)**

To encourage the faithful, Pope Leo XIV recalls saints and communities whose lives embodied evangelical love for the poor (§76-85). Their witness demonstrates that charity, rooted in prayer and sacrifice, has transformative power (§86-89). The Church today is urged to form communities where the poor feel welcomed, heard, and respected (§90-95).



**Conclusion: Love as Mission (§§ 96-121)**

In conclusion, *Dilexi te* affirms that love is the soul of evangelization and the true measure of Christian life (§96-99). Christ's words"I have loved you"are presented as both consolation and mission (§100-103). Pope Leo XIV calls for daily gestures of charity, commitment to justice, and enduring solidarity (§104-110).

Entrusting the Church to the intercession of the Blessed Virgin Mary, the Pope prays that she may truly become a home for the poor and a sign of hope for the world (§111-121).




**Necrology**

| | | |
|---|---|---|
| Fr. Ignatius S.R. | - | 01.01.2000 |
| Fr. Selvakumar I. | - | 03.01.2015 |
| Fr. Jesuraj A. | - | 13.01.2017 |
| Fr. Marianathan F. | - | 25.01.2024 |

*May their souls rest in peace!*

# YEAR PLAN - 2026

| S.No | Date | Programme | Venue |
|---|---|---|---|
| 1. | Jan 7-8 (Wed. Mor - Thu. Noon) | Clergy Reunion | V.P.C |
| 2. | February | Monthly Recollection | Respective Vicariates |
| 3. | March 30 (Monday) | Priests' Sanctification Day | V.P.C |
| 4. | June | Monthly Recollection | Respective Vicariates |
| 5. | **July 22-23 (Wed. Mor - Thu. Noon)** | **Clergy Reunion** | **V.P.C** |
| 6. | August 26 (Wednesday) | Foundation Day | V.P.C |
| 7. | September | Monthly Recollection | Respective Vicariates |
| 8. | October 4 (Sunday) | Diocesan Pilgrimage | Oriyur |
| 9. | First Batch October 11-16 (Sun. Eve. - Fri. Noon)<br>Second Batch October 25-30 (Sun. Eve. - Fri. Noon) | Annual Retreat | POONDI |
| 10. | November 18 (Wednesday) | Monthly Recollection and Mass for the Deceased Bishop, Priests & Benefactors | V.P.C |
| 11. | December 9 (Wednesday) | Monthly Recollection and Christmas Get-together | V.P.C |

N.B. : Any change will be notified in advance.

## Papal Intention - January 2026

**For Christians in areas of conflict**



**Let us pray that Christians living in areas of war or conflict, especially in the Middle East, might be seeds of peace, reconciliation, and hope.**



## INFORMATION

**For the Desk of Vicar General**

**PRIESTS' REUNION**

The Priests' Reunion will be held on January 7-8, 2026. It will begin at 9.30 a.m. on Wednesday, January 7, 2026 and will be concluded with lunch at 1.00 p.m., on Thursday, January 8, 2026. All priests are expected to be participate it without fail.

**Archbishop Justin Thiraviam Scholarship Fund** for the academic year 2025 - 2026 has been disbursed for the below mentioned number of college going poor students.

| S.No. | Vicariate | Students No. | Amount | Total Amount |
|---|---|---|---|---|
| 1 | Sivagangai | 23 | 3,000 | 69,000 |
| 2 | Devakottai | 32 | 3,000 | 96,000 |
| 3 | Paramakudi | 26 | 3,000 | 78,000 |
| 4 | Ramnad | 21 | 3,000 | 63,000 |
| 5 | R.S.Mangalam | 16 | 3,000 | 48,000 |
| | | | Total | 3,54,000 |

**Bishop Edward Francis Poor Scholarship Fund** for the academic year 2025 - 2026 has been disbursed for the below mentioned number of XI & XII poor students.

| S.No. | Vicariate | Students No. | Amount | Total Amount |
|---|---|---|---|---|
| 1 | Sivagangai | 27 | 2,000 | 54,000 |
| 2 | Devakottai | 29 | 2,000 | 58,000 |
| 3 | Paramakudi | 30 | 2,000 | 60,000 |
| 4 | Ramnad | 27 | 2,000 | 54,000 |
| 5 | R.S.Mangalam | 11 | 2,000 | 22,000 |
| | | | Total | 2,48,000 |

## Surplus Masses Remitted to Procurator

| Name | Parish | Holy Masses | Amount |
|---|---|---|---|
| 1. Carmel Convent | Sivagangai | 155 | 23,350 |
| 2. Fr. Susaimacikam | Susaiapparpattanam | 100 | 15,000 |
| 3. Fr. Vincent Amalraj | Ramnagar | 367 | 55,050 |
| 4. Fr. Lourduraj | Sarugani | 213 | 31,950 |
| 5. Fr. Arul Anand | Ariyakudi | 120 | 18,000 |
| 6. Fr. Prabaharan | Nagarikathan | 50 | 7,500 |
| 7. Fr. C.A. James | V. Michaelpattanam | 50 | 7,500 |
| 8. Fr. Jesu | Kalayarkoil | 400 | 60,000 |
| 9. Fr. D. Irudhayaraj | Paramakudi | 358 | 53,700 |
| 10. Fr. Susai Michael | Suranam | 30 | 4,500 |
| 11. Fr. Kamal Raj | Kallal | 100 | 15,000 |
| 12. Fr. Singarayar A. | Ramnad | 180 | 27,000 |
| 13. Fr. Infant Raj | T. Susaiapparpattanam | 255 | 38,200 |
| 14. Fr. Charles Kennedy | Manamadurai | 164 | 24,600 |
| 15. Fr. Jebamalai Suresh | Sivagangai | 333 | 50,000 |
| 16. Fr. Maria Dellus | Bishop's House | 20 | 3,000 |

## Contribution to the Diocese

| | | |
|---|---|---|
| Carried Forward | Rs. | 32,93,000 00 |
| Fr. Antony V.J., USA | | 4,20,000 00 |
| St. Joseph's Matric Hr.Sec.School, Ramnagar | | 5,00,000 00 |
| Kallal Parish | | 25,000 00 |
| Total | Rs. | 42,38,000 00 |

## Bishop Edward Poor Student Fund

| | | |
|---|---|---|
| Carried Forward | Rs. | 9,01,081 00 |
| St. John Bosco RC Primary School, Themmapattu | | 10,000 00 |
| Total | Rs. | 9,11,081 00 |

## Seminarian's Fund

| | | |
|---|---|---|
| Puliyal | Rs. | 10,000 00 |



## Ananda Lunch Scheme Fund

| | | |
|---|---|---|
| Carried Forward | Rs. | 5,09,686 00 |
| Annai Velankanni Matric Hr.Sec.School | | 5,000 00 |
| St. Joseph's Arts and Science College for Women | | 20,000 00 |
| Alangara Annai Cathedral | | 1,00,000 00 |
| Sivagangai Provincial, CIC | | 10,000 00 |
| Poradappu | | 10,000 00 |
| Mr. Joseph - Mrs. Rani, Manamadurai | | 10,000 00 |
| SMSSS | | 10,000 00 |
| Puliyal | | 5,000 00 |
| Mr. P. Sarpirasatham Jemma | | 5,000 00 |
| Suriyankudiyiruppu, Nanakkudi | | 10,000 00 |
| | Rs. | 6,94,686 00 |

## Bishop Susaimanickam Poor Student Fund

| | | |
|---|---|---|
| Carried Forward | Rs. | 12,07,001 00 |
| Thiruparthur Parish | | 10,000 00 |
| Total | Rs. | 12,17,001 00 |

## Poor Students' Fund

| | | |
|---|---|---|
| Carried Forward | Rs. | 1,32,500 00 |
| Thirupathur Parish | | 10,000 00 |
| Mandapam Parish | | 10,000 00 |
| Mandapam Camp | | 5,000 00 |
| | Rs. | 1,57,500 00 |

## திருமணத் தயாரிப்புப் பயிற்சி வகுப்புகள்

**ஜனவரி - 2026**

| எண் | தேதி | நாள் | இடம் |
|---|---|---|---|
| 1. | 10.01.2026<br>11.01.2026 | சனி<br>ஞாயிறு | புனித தெரசாள் ஆலயம், செஞ்சை |
| 2. | 24.01.2026<br>25.01.2026 | சனி<br>ஞாயிறு | புனித அருளானந்தர் ஆலயம், காளையார்கோவில் |

அருள்திரு. S. **ஸ்டீபன்,** செயலர், குடும்ப நலவாழ்வுப் பணிக்குழு
அலைபேசி : 9677950941

*( For private circulation only )*

Prepared by : Chancellor, Bishop's House, Sivagangai. Cell : 0091- 8807440484, 9715842573
E-Mail : svgbishop@gmail.com
Website : www.rcdioceseofsivagangai.org

# Birthday Wishes


**Fr. Kulandai Samy F.**
01.01.1966


**Fr. Jesu M.R.**
01.01.1971


**Fr. Clement Raja A.**
06.01.1970


**Fr. Gnanadasan M.J.**
06.01.1973


**Fr. David Kulandai Nathan S.**
07.01.1972


**Fr. Deva Sahayam F.**
12.01.1976


**Fr. Immanuel Dossan A.**
14.01.1969


**Fr. Suvakin Jebamalai A.**
20.01.1976


**Fr. James Sahayaraj C.A.**
26.01.1965


**Fr. Jesuraj V.**
26.01.1971


**Fr. Antony Raja I.**
30.01.1970

Many More Happy Returns of the Day!


Ecumenical Christmas Celebration


Christmas Celebration, VPC


TMSSS, Trichy


CRI Christmas, Bosco Maiyam


Archbishop Casmimir Birth Centenary Celebration, Suranam


Altar Blessing, Mandapam


Closing of the Jubilee year 2025, Sivagangai


நம் வாழ்வு, சென்னை


Church Blessing, Poradappu, Sarugani


Confirmation, Puliyal